**PG-101** **MAT–11**

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

First Year

இக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. கண்ணனைக் குழந்தையாகக் கருதிப்பாடிய பாரதியின் எண்ணங்களைப் புலப்படுத்துக.

2. பாரதிதாசனின் தமிழ்ப்பற்றை 'அழகின் சிரிப்பு'வழி விளக்குக.

3. ஆசிய ஜோதியின் காவியச் சிறப்புக்களைக் கூறுக.

4. நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' நாவலின் கதைத்தலைவனின் பண்புகளை உரைக்க.

5. அறிஞர் அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகம் காட்டும் சமூக அவலங்களைக் கூறுக.

6. ‘நந்தன் கதை’ நாடகத்தின் கதைச் சுருக்கத்தை உரைக்க.

7. திரு.வி.க.வின் சீர்திருத்தக் கருத்துக்களை விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 10 = 50$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

8. பாரதி கண்ணனை எத்தகைய நிலைகளில் எல்லாம் போற்றிக் கொண்டாடுகின்றார்? விளக்குக.

9. ‘புத்தர் வாழ்வை விளக்கும் புதுமைக் காப்பியம் ஆசிய ஜோதி’ விளக்குக.

10. மீராவின் கவிதைகளில் உள்ள இலக்கிய உத்திகளை விளக்குக.

11. யுகசந்தியின் மூலம் வெளிப்படும் சமூகநிலை குறித்து எடுத்துரைக்க.

12. சா. கந்தசாமியின் மொழிநடைத் திறனை விவரிக்க.

13. உ.வே சா.வின் தமிழ்ப்பணி குறித்து விளக்கி உரைக்க.

14. சோழநாட்டு ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஊர்கள் குறித்த ரா.பி.சேதுப்பிள்ளையின் கருத்துக்களை எடுத்துரைக்க.

———————

| PG–102 | MAT-12 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE 2018.

## First Year

### இடைக்கால இலக்கியம்

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. திருஞானசம்பந்தர் - குறிப்பு வரைக.

2. ‘பக்தி இலக்கியத்தின் முன்னோடி காரைக்கால் அம்மையார்’ விளக்குக.

3. சூடிக் கொடுத்த சுடர் கொடி யார்? அவர் படைப்புக்கள் குறித்து எழுதுக.

4. சிவவாக்கியரின் இறையனுபவங்கள் யாவை?

5. அழகரின் பெருமைகளைத் தூதுநூல் எங்ஙனம் உரைக்கிறது?

6. குணங்குடிமஸ்தான் சாகிபு கூறும் இறையியல்புகள் யாவை?

7. எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை, திருச்சபை குறித்துக் கூறுவன யாவை?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

8. சம்பந்தர் பாடல்களில் புலப்படும் இறைப்பற்றை எடுத்துரைக்க.

9. பாவை நோன்பு என்றால் என்ன? நோன்பு முறைகளையும், பெறும் பயன்களையும் எடுத்துரைக்க.

10. திருமங்கையாழ்வார்களின் பாடற் சிறப்புகளை விவரிக்க.

11. செயங்கொண்டார் குறிப்பிடும் போர்க்களத்தை வருணிக்க.

12. குற்றால மலையின் வளங்களையும், குறவர் வாழ்க்கை முறைகளையும் விவரி.

13. நும் பாடப்பகுதியில் அமைந்த மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் கூறப்படும் மீனாட்சியின் பெருமைகளை எடுத்துரைக்க.

14. இராமலிங்கர் இறையிடத்து வேண்டுவன யாவை?

———————

| PG–103 | MAT–13 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## First year

## Tamil

இலக்கணம் : தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.

1. பன்னீரெழுத்தும் உயிரென மொழிப – விரிவாக விளக்குக.

2. ஓரெழுத்தொரு மொழி – எழுத்ததிகாரம் கூறுவது யாது?

3. எழுத்துக்களது பொதுப்பிறப்பு பற்றி எடுத்துக்காட்டுக.

4. எழுத்துச் சாரியைகள் குறித்து எழுதுக.

5. கசதபக்களின் முன் மென்கணம் மிகுதலைத் தொகைமரபு வழி விளக்குக.

6. மரம் + வேர், குளம் + கரை, பழம்+சாறு – புணருமாற்றை எடுத்துரைக்க.

7. அகர ஈறு இயல்பாய் முடிதல் பற்றி உயிர்மயங்கியல் குறிப்பிடுவது யாது?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

கீழ்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு விரிவான அளவில் விடை தருக.

8. எழுத்ததிகாரத்தின் அமைப்பினையும், வகுக்கப்பட்டிருக்கும் இயல்களின் செய்திகளையும் விரிவான அளவில் விளக்கி வரைக.

9. எழுத்ததிகாரம் வழி அறியலாகும் தமிழ் ஒலியியல் குறித்த செய்திகளை விரிவான அளவில் தொகுத்துரைக்க.

10. சாரியைகள் குறித்து தொல்காப்பியம் கூறுவனவற்றை விரிவான கட்டுரையாக்கம் செய்க.

11. உருபுகளோடு பெயர் புணர்தலை உருபியல் எடுத்துரைக்கும் போக்கினை விவரித்து எழுதுக.

12. புணர்ச்சி குறித்து எழுத்ததிகாரம் குறிப்பிடுவனவற்றைக் கட்டுரை வடிவில் தொகுத்துரைக்க.

13. அறுவகைப்படும் குற்றியலுகரம் புணர்தலைப் தொல்காப்பிய வழி நின்று எழுதுக.

14. மொழி இறுதி எழுத்துக்களை விரிவாக எடுத்துரைக்க.

———————

| PG–104 | MAT–14 |
| --- | --- |

M.A. DEGREE EXAMINATION —
JUNE, 2018.

First Year

Tamil

தொல்காப்பியம் – சொல்லதிகாரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.

1. பால்வழுவமைதி – விளக்கி வரைக.

2. நான்காம் வேற்றுமையின் பொருளை எடுத்துக்காட்டுக.

3. ஆக்கம் தானே காரண முதற்றே – விளக்கந்தருக.

4. விளி ஏற்கும் புள்ளி ஈறுகள் குறித்து எழுதுக.

5. குறிப்பு வினைமுற்று – விளக்குக.

6. உயர்திணைப்பெயர்கள் குறித்து தொல்காப்பியம் கூறுவதைக் குறிப்பிடுக.

7. உரிச்சொல்லின் வகைகளைக் கூறுக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு விரிவான அளவில் விடை தருக.

8. பல பொருள் ஒரு சொல் குறித்து கிளவியாக்கம் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

9. ஐந்தாம் வேற்றுமை குறித்து எடுத்துக்காட்டுக.

10. விரவுப்பெயர்கள் பற்றி தொல்காப்பியர் கூறும் செய்திகளை விவரிக்க.

11. வினையெச்சம் குறித்த தரவுகளைத் தொல்காப்பியம் வழி நின்று விளக்குக.

12. இடைச்சொல்லின் வகைகளை விவரித்துக் கட்டுரை வரைக.

13. பொருள்கோள் குறித்த சொல்லதிகாரச் செய்திகளைத் தொகுத்துக்காட்டுக.

14. தொகைச்சொல் வகைகளை விளக்கி எடுத்துரைக்க.

———————

| PG–105 | MAT–15 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Tamil

### தமிழ்மொழி வரலாறும் இலக்கிய வரலாறும்

Time : 3 hours  Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. தொல்காப்பியத்தின் காலம் குறித்த அறிஞர்களின் கருத்து யாது?

2. தமிழ் ஓர் தனிமொழி என்பதைச் சுட்டுக.

3. எட்டுத்தொகையில் அகநூல்கள் குறித்து எழுதுக.

4. உள்ளுறை உவமம் – குறிப்பு வரைக.

5. நாயன்மார்களின் தமிழ்ப் பணியைச் சுட்டுக.

6. சிற்றிலக்கியங்கள் என்பதை வரையறு.

7. தமிழ்ப் புதுக்கவிதை முன்னோடிகளைச் சுட்டுக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு நான்கு பக்க அளவில் விடை தருக.

8. தமிழ்மொழியின் தொன்மை வரலாற்றை விவரி.

9. சங்க இலக்கியத்தன் தனிச்சிறப்புகளை விவரி.

10. தமிழில் அற இலக்கியங்களின் தோற்றப் பின்புலத்தை ஆய்க.

11. ஐம்பெரும் காப்பியங்களைச் சுட்டி, காப்பிய இயல்புகளை விவரி.

12. சிற்றிலக்கியங்களின் நோக்கையும் போக்கையும் விவரி.

13. இக்கால இலக்கிய வளர்ச்சியில் இலக்கிய இயக்கங்களின் பங்கினை விளக்குக.

14. தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி நிலைகளை விவரி.